வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 05.04.2025 சனிக்கிழமை | இதழ் : 97 | பக்கங்கள் : 12




## நேற்றிரவு கொழும்பு வந்தார் மோடி!

### இன்று அவருக்கு கோலாகல வரவேற்பு முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்பார்

கொழும்பு, ஏப். 05

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு கொழும்பை வந்தடைந் தார். தாய்லாந்தின் தலைநகர் பாங் கொக்கில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து இலங்கைக்கான 3 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக அவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் வருகையை யடுத்து அவரை வரவேற்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. தலைநகர் கொழும்பு மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

11



### வேட்புமனு நிராகரிப்புக்கு ஆட்சேபம்:

## 59 மனுக்களை நேற்று அடியோடு நிராகரித்துள்ளது உயர்நீதிமன்று

### மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு முற்றிலும் மாறாக அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 05

**உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட 37 ரிட் மனுக்களை ஏற்றுக் கொண்டு, அவற்றைத் தேர்தல் நடவடிக்கையில் சேர்க்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முற்பகல் தீர்ப்பளித்தது. ஆயினும் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு சில மணி நேரத்தில், அதேபோன்று 59 மனுக்களை உயர்நீதிமன்றம் அடியோடு நிராகரித்து தீர்ப்பு வழங்கி யது.**

இளம் வேட்பாளர்க ளின் வயதை உறுதிப் படுத்துவதற்கான பிறப் புச் சான்றிதழை பொறுத் தவரை சான்றிதழ் பத் திரத்தின் நிழல் படப் பிர தியில் சமாதான நீதி வான் சான்றுரைத்து இருந்தால் அத்தகைய ஆவணத்தை நிரா கரிக்காமல் ஏற்றுக் கொண்டு, அதன் அடிப் படையில் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டவை யாகக் கூறப்பட்ட 37 வேட்புமனுக்களை ஏற் றுக்கொள்ளுமாறு நேற்று முற்பகல் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன் றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் எம். ரி.முஹம் மட் லபார், நீதியரசர் கே. பிரியங்கா பெர்னாண்டோ ஆகி யோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை வழங்கி யது. ஆனால் கடந்த நான்கு நாள்களாக

இதேபோன்ற மனுக்களை

11

## மோடியின் கரம் பிடித்து நாம் கரையேறவேண்டும்!

### அரசுக்கு மனோ ஆலோசனை

கொழும்பு, ஏப். 05

மிகச் சரியான சந்தர்ப்பத்தில் இலங்கை வரும் இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடியின் கரங்களை நாம் இறுக பற்றி, வளர்ச்சி அடையும் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடான இந்தியாவுடன் சேர்ந்து கரை யேறவேண்டும் எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கான 25 வீதத்தை இறக்குமதி செய்யும் அமெரிக்க நாட் டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய

11

## நல்லெண்ண அடிப்படையில் 11 இந்திய மீனவர் விடுதலை!

யாழ்ப்பாணம், ஏப். 05

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுப்பட்ட என்ற குற்றச்சாட் டின் பேரில் கைது செய்யப்பட்ட 11 இந்திய மீனவர்கள் இலங்கை அரசின் நல்லெண்ண அடிப்படையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை பெற்ற பிறகு கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பணங் களை ஏற்றுக்கொண்ட பின்னரே ஊர்காவற் றுறை நீதிமன்றத்தால் இவர்களை விடுதலை செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

11

## மேன்முறையீட்டு நீதிமன்று வழங்கிய உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு!

கொழும்பு, ஏப். 05

உள்ளூராட்சித் தேர் தலையொட்டி நிராகரிக் கப்பட்ட 37 வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன் றம் நேற்று முற்பகல் வழங்கிய தீர்ப்புக்கு எதி ராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது.

வேட்புமனுக்களில் இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவ தற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிறப்பு அத் தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதிக்குப் பதி லாக நிழல் பட பிரதியில் சமாதான நீதிவான் சான்று ரைத்திருந் தால் அதனை

11

## வடக்கில் 3 முதலீட்டு வலயங்கள் மூன்றாம் காலாண்டில் ஆரம்பம்!

### 16 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 05

அரசாங்கம் வடக்கில் முன்மொழிந்துள்ள 3 முத லீட்டு வலயங்களும் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் ஆரம்பிக்க எதிர்பார்ப் பதாகவும் இதன் ஊடாக 16,000 பேருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் எனவும் இலங்கை முதலீட்டுச் சபை யின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், இலங்கை முதலீட்டுச் சபையினர் மற்றும் வடக்கின் அரசாங்க

11

## தேர்தல் திகதியில் மாற்றம் கிடையாது

கொழும்பு, ஏப். 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதியில் எந்தவித மாற்ற மும் இல்லை எனத் தேர் தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

11

## பூஸா சிறையில் தாக்கப்பட்டு தமிழ் கைதி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 05

காலி, பூஸா சிறைச்சாலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் தமிழ்க் கைதி ஒருவர் உயிரிழந் துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள் ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி, சக கைதி ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படு கின்றது.

11

## ட்ரம்பின் தீர்மானத்தினால் அதிர்ச்சியடைந்துள்ளோம்!

### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஏப். 05

இலங்கை மீது அமெ ரிக்கா சமீபத்தில் விதித்த பரஸ்பர வரிகளால் அதிர்ச்சியடைந்துள் ளோம். இந்த நடவடிக்கை நாம் எதிர்பாராதது. இது ஏற்றுமதி இலக்குகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்ப டுத்தும் என்று குறித்து தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச் சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு தமிழர் பொருளாதாரம் இந்திய மீனவர்களால் அழிவடைகிறது!

## நெடுந்தீவில் சிறிதரன் எம்.பி. கவலை

யாழ்ப்பாணம், ஏப். 05

இந்திய மீனவர்களாலேயே வடக்கு-கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் பெரியளவில் அழிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நெடுந்தீவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய மீனவர்களின் வருகையால் இதுவரை ஈழத்தமிழர்களின் பொருளாதாரம் பாதிக்கு மேல் அழிந்து விட்டது. தமது பொருளாதாரத்தை பெருக்கிக்கொள்ள முடியாத நிலையிலும் இயல்பு வாழ்க்கையை இழந்த நிலையிலும் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள்.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்த 15 ஆண்டுகளில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் பெரியளவில் அழிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான அடிப்படைக் காரணமே இந்திய மீனவர்களின் வருகைதான்.

அவர்களுடைய மீன்பிடிப் பொறிமுறைகள் எமது பகுதி மக்களின் மீன்பிடி வலைகளை அறுத்தல் மற்றும் அவர்களது உற்பத்திகளை முடக்குதல் ஆகியவை காரணமாக எமது மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் மேலும் அவர்களது வாழ்வாதாரங்களை அழிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்கின்றது.

இது தொடர்பாக நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பல மீனவர்கள் என்னிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முன்பெல்லாம் வாரத்தில் ஓரிரு நாட்களில் மட்டுமே இந்திய மீனவர்கள் வருவார்கள். இடைப்பட்ட நாட்களில் எமது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.
இப்பொழுது அதற்குக்கூட வழியில்லாமல் உணவுக்காக கூட நாம் கஷ்டப்படுகிறோம் என நெடுந்தீவு மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தரப்பிடம் எமது மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து தீர்வு காண்பதற்கான அழுத்தம் கொடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளேன் - என்றார்.

(அ)

# ஆழியவளைக் கடற்கரையில் மீனவர்கள் இடையே முறுகல்!

யாழ்ப்பாணம், ஏப். 05

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்றொழிலாளர் சங்க எல்லைக்குட்பட்ட கடற்பகுதிகளில் ஒருவர் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதனால் நேற்றுக் காலை மீனவர்கள் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

குறித்த கடற்பகுதிகளில் மனித வலுவற்று உழவு இயந்திரம் பாவித்து கரைவலைத் தொழில் புரிவது குறித்த சங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி நபர் ஒருவர் அப்பகுதியில் உழவு இயந்திரம் கொண்டு அடாத்தாக தொழில் புரிந்ததால், அங்கு மீனவர்கள் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

குறித்த கரைவலை வாடியை அகற்றுமாறு நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள், மருதங்கேணி பொலிஸ் நிலையம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்றவற்றுக்கு அறிவுறுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவித்த மீனவர்கள், வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் சட்டத்திற்கு முரணாக கரைவலை தொழிலை மேற்கொள்வதால் படகுகள் சேதமடைவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பாக நீரியல் வளத்திணைக்கள அதிகாரியிடம் வினவியபோது, குறித்த கரைவலை சம்மாட்டிக்கு உழவு இயந்திரம் கொண்டு தொழில் புரிவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும், அவரை உடன் அப்பகுதியில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

(அ)

# சென்னையிலிருந்து காங்கேசனை வந்தடைந்த இரு பாய்மர படகுகள்!



யாழ்ப்பானம், ஏப். 05

சென்னையில் இருந்து காங்கேசன்துறைக்கு 10 பேர் அடங்கிய 2 பாய் மரப்படகுகள் நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் வந்தடைந்தன.

400 கிலோமீற்றர் தூரத்தை இலக்காகக் கொண்டு " றோயல் மட்றாஸ் யாச்சட் கிளப் அங்கத்தவர்களால் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட இப்படகுப் பயணம் நாகப்பட்டினத்தை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறையை வந்தடைந்தது.

நேற்று மீண்டும் நாகப்பட்டினம் சென்ற இப்படகுகள் பின்னர் பூம்புகாரை அடைந்து அங்கிருந்து பாண்டிச்சேரியைச் சென்றடைந்து அங்கிருந்து கோவளத்தினையும் இறுதியில் மீண்டும் சென்னையில் நிறைவடையவுள்ளது.

பயணிகளை வரவேற்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வட மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், சுற்றுலா துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

(அ-05)

# யாழில் ஐ.தே.கவின் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப். 05

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் நேற்று முன் தினம் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள, மற்றும் உதவித் தலைவர் அகில விராஜ் காரியவசம் மற்றும் வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

(அ)

# நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் யாழ். பதில் அரச அதிபருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப். 05

நீதி மற்றும் தேசிய ஒரு மைப்பாட்டு அமைச் சின் மேலதிகச் செயலாளரும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தின் பணிப் பாளர் நாயகமும், முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருமான க. மகேசன் நேற்று முன் தினம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு சென்று பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது தேசிய ஒற்றுமை மற்றும் ஒரு மைப்பாட்டுச் செயலகத்தினால் நடை முறைப்படுத்தி வரும் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

(அ-05)

# நீதியமைச்சருடனான சந்திப்பில் தையிட்டி பிரச்னை புறக்கணிப்பு

## காணி உரிமையாளரான சுகுமாரி கவலை

யாழ்ப்பாணம், ஏப். 05

நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுடனான சந்திப்பில் தமது பிரச்னைகள் குறித்து எந்தவிதமான விவகாரங்களும் பேசப்படவில்லை என தையிட்டி காணி உரிமையாளர்களில் ஒருவரான சுகுமாரி சாருஜன் கவலை தெரிவித்தார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை விடுவிப்பு தொடர்பான முக்கிய கலந்துரையாடலில் அரசின் சார்பாகக் கலந்துகொண்ட நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உள்ளிட்ட அரச தரப்புப் பிரதிநிதிகள் வெளியேறியமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் எனும் ஒரு அமைப்பு எம்மை தையிட்டியில் சந்தித்து காணி உரிமையாளர்களின் காணி உறுதி, தோம்புகள் உள்ளிட்ட ஆவணங்களை ஆராய்ந்து அவற்றின் நகல் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். குறித்த அமைப்பினர் விகாராதிபதியுடனும் பேச்சில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நாக விகாரையில் நீதியமைச்சர் தலைமையிலான ஓர் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் நீதியமைச்சரின் ஊடாகவே தீர்க்கப்படவேண்டும். எனவே குறித்த எமது ஆவணங்கள் ஆராயப்பட்டு உரிய தீர்வு வழங்கப்படும் என்பதாகவே எமக்கு கூறப்பட்டிருந்தது.

ஆனாலும் நீதியமைச்சர் தனது தலைமை உரைக்குப் பின்னர் தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தம் ஈடுபடுவது பொருத்தமற்றது எனக் கூறி வெளியேறினார்.

இதனால் காலையில் நாம் சந்திப்புகளை மேற்கொண்ட அதே குழுவினருடனேயே மீண்டும் கலந்துரையாடலில் ஈடுபடவேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த இரு கூட்டங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பில் இருந்த சிலர் வேட்பாளர்களாக இருந்தமையால் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை. சட்டவிதிகளுக்கு அமைவாக நாம் இதனை எதிர்க்கவில்லை.

அமைச்சரின் இக்கலந்துரையாடலுக்கான வருகையை நாம் வரவேற்றத்துடன் எமது பிரச்னைகள் தீர்க்கப்படும் என நம்பியிருந்தோம். ஆனாலும் அவர் எமது பிரச்னைகள் குறித்து எதுவுமே பேசவில்லை.

அமைச்சரின் வெளியேற்றத்தின் பின்னர் மத குருக்களின் போதனைகளே அங்கு நடைபெற்றிருந்தன. ஆனாலும் மிகுந்த சவாலுக்கு மத்தியில் அவர்களுக்கு இது ஒரு சட்டவிரோத கட்டடமே தவிர இந்த விவகாரத்துக்கு எவ்வித மதச் சாயங்களும் பூசவேண்டாம் எனும் எமது தரப்பு நியாயங்களையும் கோரிக்கைகளையும் வழங்கியிருக்கிறோம்.

இதேவேளை, இக்கலந்துரையாடலுக்கு பௌத்த மகா சங்கத்தைச் சார்ந்த நான்கு பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் பொருத்தமற்ற தமது தரப்பு நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

அவர்களுக்கும் எமது தரப்பு பதில்களை தெளிவாக நாம் முன்வைத்திருக்கிறோம். இந்நிலையில், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சார்ந்தவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இவ்விவகாரம் தொடர்பான தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அதேவேளை, இரு தரப்பு நியாயங்களையும் பரிசீலித்து ஒரு தீர்வை எட்டவுள்ளதாக உறுதியளித்துள்ளனர். பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.04.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சுலோக அரசியல்

தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்துவதாக கூறிக் கொள்ளும் அரசியல்வாதிகள் வழமைபோல் அவர்களுக்கு பழக்கமான சுலோகங்களை உச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையில் நிற்கும் வேளையில் வழமைபோல் தங்களின் சமஷ்டிப் புராணத்தை பாடத் தொடங்கிவிட்டனர். பிரதமர் மோடி இராஜதந்திர நடைமுறைகளுக்கு அமைவாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் சிலரை சந்திப்பார். இதன் போதும் சமஷ்டிப் புராணத்தையே தமிழ் பிரதிநிதிகள் பாடுவர். பிரதமர் மோடியும் வழமைபோல் சம்பிரதாயபூர்வமான முகபாவனையுடன் அரை மணித்திலாயத்தை முடித்துக் கொண்டு வெளியேறிவிடுவார்.

ஒரு நாடு அறிவிக்கப்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் போது, அதற்கு மாறான நிலைப்பாடுகளை குறித்த நாட்டிடம் கோரக் கூடாது. அது குறித்த நாட்டின் அரசியல் உயரடுக்கினருக்கு தேவையற்ற சங்கடங்களை கொடுக்கும் என்னும் ஆகக் குறைந்த அரசியல் முதிர்ச்சியைக் கூட தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் காண்பிப்பதில்லை என்பதுதான் கவலைக்குரியது. இத்தனைக்கும் தமிழ் அரசியல் சமூகத்திற்கு 75 வருட கால அனுபவம் உண்டு. இதில் இந்தியாவுடன் 40 வருட கால அனுபவம் உண்டு.

இந்த நாற்பது வருட கால இந்திய ஈடுபாட்டின் போது, இந்தியா இதுவரையில் சில அடிப்படைகளிலிருந்து விலகியதில்லை - அதாவது, இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கை தங்களின் வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் எண்ணிக்கையில் சிறுபான்மையான தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான அரசியல் உரிமையுண்டு, அந்த வகையில் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், இந்த அடிப்படையைக் கருத்தில் கொண்டு, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும், மாகாண சபை முறைமைய விளைத்திறனுடன் இயங்குவதற்கான அரசியல் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் - இதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டின் மீதான உறுதிப்பாட்டை இந்திய இராஜதந்திரிகள் தமிழ் அரசியல்வாதிகளை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இறுதியாக தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், அனைத்து கட்சிகளையும் ஓரிடத்தில் சந்தித்து, இதனை வலியுறுத்தியிருந்தார். இதன் பின்னரும் இந்தியப் பிரதமரிடம் சமஷ்டியை வலியுறுத்துவது என்பது வேண்டும் என்றே தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைத்து விடக் கூடாது, தொடர்ந்தும் தென்னிலங்கையின் கையே ஓங்கியிருக்கவேண்டும் என்பதற்காக செய்யும் ஓர் அரசியல் சூழ்ச்சியாகவே நோக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்தியா மட்டுமல்ல வேறு எந்தவொரு பலம் பொருந்திய நாட்டினாலும், சிங்கள அரசியல் சமூகத்தை விரோதித்துக் கொண்டு, இலங்கைத் தீவில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பு ஒன்றை நிறைவேற்றமுடியாது.

இந்திய பிரதமரை சந்திக்கும் போது, சமஷ்டிப் புராணத்தை விட்டு விட்டு, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் - அதேபோன்று, நீங்கள் குறிப்பிட்டதுபோன்று அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்புமாகும் - ஆனால், உங்களின் தலையீடு இல்லாமல் அதனைச் செய்ய முடியாது. எனவே இந்த விடயங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைந்து விடயங்களை முன்னெடுக்கும் வகையில் நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும் என்று கோரினால் அது புத்திசாதுரியமானது. இல்லாவிட்டால் ஒரு பிரச்னையும் இல்லை - ஒரு பொல்லாப்பும் இல்லை, எல்லோம் எப்போதோ முடிந்த காரியமாகலாம்.

# இணையப் பாதுகாப்பு தொடர்பான அரச அலுவலர்களுக்கு செயலமர்வு



யாழ்ப்பாணம், ஏப். 05

இணையப் பாதுகாப்பு தொடர் பாக அரசாங்க உத்தியோகத் தர்களுக்கான செயலமர்வு யாழ்ப் பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 09.30 மணி தொடக்கம் பி.ப 03.30 மணி வரை மாவட்ட செயலக மாநாட்டு மண் டபத்தில் நடை பெற்றது.


இதன்போது தலைமையுரை யாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர், தற்போதைய காலகட்டத்தில் இணைய செயற்பாடுகள் அலுவலகச் செயற்பாடுகளுடன் இணைந்திருப்ப தாகவும், தற்போது அரசாங்க சேவையினை துரிதப்படுத்துவதற்காக தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் இணைய வழிகளிலும் மற் றும் வட்சப் குழுமத்தின் ஊடாகவும் பரிமாற் றப்படுவதாகவும், அது விரைவான வினைத் திறனான சேவைக்கு துணை நிற்பதாக வும் குறிப்பிட்டார். மேலும் இணையவழி பாது காப்பு தொடர்பான இச் செயலமர்வு பயனு றுதி வாய்ந்தது எனவும், ஆதலால் உத்தியோ கத்தர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளு மாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

இச் செயலமர்வில்வள வாளர்களாக சேர்ட் நிறுவனத்தின் முகாமையாளர் திலின திசா நாயக்க, பொறியியலாளர்களான திருமதி திருனி திசார, திருமதி பாத்திமா மினோசா, சவிர் அகமட் மற்றும் திருமதி தர்சினி டிலானி ஆகியோர் பங்குபற்றினர்.

இச் செயலமர்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலக உதவி மாவட்டச் செயலாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட, பிரதேச செயலக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ-05)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சிறப்பான மகளிர் தினம்






யாழ்ப்பாணம், ஏப். 05

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் சமுர்த்திப் பிரிவு இணைந்து சட்டத்துக்கும் மனித உரிமைக் குமான நிலையத்தின் அனுசரணையுடன் நடத்திய மகளிர் தின நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சங்கீதா கோகிலதர்சன் தலைமையில் கடந்த புதன் கிழமை அன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் இனிய விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி. சுபாஜினி மதியழகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் ஆலோசகர் குஞ்சிதபாதம் கௌதமன், சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் யோண் அன்ரன் றொகான் கிளிநொச்சி மாவட்ட உளநலச் சங்க இணைப்பாளர் ஸ்ரீசரவணபவன் கஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட பால், பால் நிலை சமத்துவம் தொடர்பான கருத்தமர்வும் இடம்பெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் ஆலோசகர் குஞ்சிதபாதம் கௌதமன் வளவாளராக பங்குபற்றினார். அத்துடன் விழிப்புணர்வு நாடக ஆற்றுகையும் கண்காட்சியும் இடம்பெற்றது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 05 சனிக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 22
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அஷ்டமி




**மேடம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது.வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். நீங்கள் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பஉங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உறவினர், சில சூட்சமங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைகள் ஏற்படும் நாள்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மேலதிகாரி ஒத்துழைப்பார். வெற்றி கிடைக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். மற்றவர்களுக்காக நியாயம் கேட்கப் போய் பெயரை கெடுத்து கொள்ளாதீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மீனம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். புது வேலை கிடைக்கும். வாகனவசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

# நாக பாம்பை தன் கைகளினால் பிடித்த குருக்கள் அது தீண்டி பலி!

## அராலிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 05

குருக்கள் ஒருவர் நாக பாம்பைக் கைகளால் பிடித்தபோது அந்தப் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார். இதன்போது புத்தூர், சிவன்கோவில் வீதியைச் சேர்ந்த கணேசக்குருக்கள் கௌரிதாசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்தக் குருக்கள் அராலிப் பகுதியில் உள்ள வாலையம்மன் கோவிலில் பூசை செய்து வந்துள்ளார். கடந்த 31ஆம் திகதி இரவு பூசையை முடித்துவிட்டு கோவிலுக்கு அருகேயுள்ள வீட்டுக்குச் சென்று முற்றத்தில் இருந்துள்ளார். இதன்போது அங்கு வலையில் சிக்கியிருந்த நாக பாம்பை கைகளால் பிடித்துள்ளார். இதன்போது பாம்பு அவரைத் தீண்டியது.

இந்நிலையில் வீட்டில் உள்ளவர்களை அழைத்துப் போத்தல் ஒன்றை வாங்கிப் பாம்பை போத்தலினுள் விட்டுவிட்டு, தன்னை பாம்பு தீண்டிய விடயத்தை கூறி அதன் விசத்தை இல்லாது செய்யவும் தனக்கு தெரியும் எனக் கூறியுள்ளார்.

இருப்பினும் வீட்டாரின் வற்புறுத்தலினால் முதலாம் திகதி அதிகாலை 1 மணியளவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-05)

# காங்கேசன் -நாகபட்டினம் இடையேயான கப்பல் சேவையில் எந்த தடங்கலுமில்லை

யாழ்ப்பாணம், ஏப். 05

சிவகங்கை கப்பல் சேவையானது காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே சீராக சேவையில் ஈடுபடுவதாகவும், எந்தவிதமான தடைகளும் இல்லாமல் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் அந்த கப்பல் நிறுவனத்தின் இயக்குனர் ஜெயசீலன் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவையில் தடங்கல் இருப்பதாக தகவல்கள் வெளியாகிய நிலையில் அவரைத் தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கப்பல் சேவையில் தடங்கல் உள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களில் எந்த உண்மையும் இல்லை. பயணிகள் மிகவும் சௌகரியமாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். இந்த விடயத்தை நீங்கள் பயணிகளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

செவ்வாய்க்கிழமை தவிர்ந்த அனைத்து நாட்களும் கப்பல் போக்குவரத்து சேவை இடம் பெறுகிறது.

எனவே பயணிகள் www. Sailsubham.com என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலமாகவோ அல்லது 0212224647, 0117 642117 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ ஆசன பதிவுகளை மேற்கொள்ள முடியும்- என்றார். (அ- 05)

# தெல்லிப்பழை வைத்தியசாலை தாதி விபத்தில் சிக்கி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 05

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் பெண்ணொருவர் விபத்தில் சிக்கிய நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். வட்டுத் தெற்கு, சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் கிருஷ்ணவேணி (வயது 52) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 26ஆம் திகதி இரவு கடமைக்காக மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்தார். இதன்போது அராலி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், விளான் சந்திப் பகுதியில் அவரது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த குறித்த தாதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-05)

# ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்ட ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 05

ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். இதன்போது அரசடி வீதி, இருபாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த கிட்ணசாமி கிருபைராஜா (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்துள்ளார். நோயின் வீரியத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் நேற்று முன்தினம் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-05)

# வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல்

வவுனியா, ஏப். 05

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வவுனியா மாவட்ட வேட்பாளர்களுக்கான தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் தொடர்பான கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வவுனியா தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நகரசபை கலாசார மண்டபத்தில் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ. சரத்சந்திர, மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் ஆகியோர் தேர்தல் நடவடிக்கை மற்றும் பிரசார நடவடிக்கைகளின்போது வேட்பாளர்கள், கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செயற்படவேண்டிய விதிமுறைகள் தொடர்பாகவும், தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதில் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவர் படுகொலை!

கொழும்பு, ஏப். 05

பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

கூர்மையான ஆயுதத்தால் தாக்கி அவர் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் இந்தக் கொலையை சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவர் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக வும் இது தொடர்பில் விசா ரணைகள் நடைபெறு கின்றன என்றும் சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சலுகை விலை உணவு பொதி திட்டத்துக்கு தற்காலிக தடை!

## தேர்தல்கள் ஆணைக்குழு விதித்தது

கொழும்பு, ஏப். 05

**தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சலுகை விலையில் உணவு பொதிகளை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது. எதிர்வரும் மே 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே இந்தத் திட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், தேர்தல் நடைபெற்று முடியும் வரை சலுகை விலையில் உணவுப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர், வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்துமூலமாக அறிவித்துள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மக்களின் வாழ்க்கை செலவை குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் இம்மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவிருந்தது.

இதற்காக, அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவுசெய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள 8 இலட்சத்து 12 ஆயிரத்து 753 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்தக் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியை 50 வீத விலைக்கழிவுடன் 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 3 வாகனங்கள் மோதிய விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 05

மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவில் காலி - கொழும்பு வீதியில் வெட்டுமகட பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

களுத்துறையிலிருந்து காலி நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியில் பயணித்த சைக்கிளுடன் மோதி பின்னர் பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்து நாகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இதனையடுத்து, பஸ் சாரதியும் முச்சக்கரவண்டியின் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 05

கொக்கலை ஆற்றிலிருந்து காலி - ஹபரா துவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துவமலலகம பிரதேசத் தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

5 அடி 6 அங்குலம் உயரமு டைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை ஹபராதுவை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# மதுஷன் உட்பட இருவர் பிணை

கொழும்பு, ஏப். 05

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷன் சந்திரஜித் உட்பட இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இருவரும் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர், தலா 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி சுகாதார அமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது இவர்கள் இருவர் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டனர். 25 பேர் முன்னரே பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கல்கிசையில் இளைஞர் கைது

கொழும்பு, ஏப். 05

80 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கொழும்பு கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கல்கிசை மலிபன் சந்தியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் இரத்மலானை பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பிலியந்தலை பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றிலிருந்து 700 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 4 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# சுதேச மருத்துவ முன்னாள் அமைச்சரின் செயலர் கைது!

கொழும்பு, ஏப். 05

ஆயுள்வேத மருத்துவ பதிவு சான்றிதழை பெற்றுத் தருவதாகக் கூறி இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுதேச மருத்துவ அமைச்சரின் செயலாளரை 8 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபரான சந்தன குமார சிறிவர்த்தன ஆயுர்வேத மருத்துவ சபையிடமிருந்து பதிவு சான்றிதழை பெற்றுத்தருவதாக கூறி நபரொருவரிடம் 10 இலட்சம் ரூபாய் பணத்தை கோரி முதலில் 5 இலட்சம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்றுள்ளார். (ஐ)

# 10 கோடி ரூபாய் பெறுமதியான கைபேசிகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 05

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 10 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான கைபேசிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபர் மட்டக்களப்பு - காத்தான்குடியை சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார். சந்தேக நபர் டுபாயிலிருந்து நேற்று காலை 6.30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவரிடம், நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் 528 கைபேசிகள் கைப்பற்றப்பட்டன. இதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இந்தியாவை இறுகப் பற்றி சேர்ந்து கரையேற வேண்டும்!

## மனோ எம். பி. அறிவுரை

கொழும்பு, ஏப். 05

மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி யுகத்தை நம் நாடு தாங்காது. தொழிற்துறை முடங்கி, வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து, பணப் புழக்கம் குறையவிடக்கூடாது.

மிகச் சரியான சந்தர்ப்பத்தில் இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கரங்களை நாம் இறுகப்பற்றி, வளர்ச்சி அடையும் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடான இந்தியாவுடன் சேர்ந்து கரையேற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தனி ஒரு நாடாக, இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கான 25 வீதத்தை இறக்குமதி செய்யும் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய வரி விதிப்பின் பின்னரான நிலைமையின் பாரதூரத்தை ஜனாதிபதி அநுரகுமார உணர வேண்டும். இது பழைய இடதுசாரி அரசியல் செய்யும் நேரமில்லை.

ஜனாதிபதி ட்ரம்பின் வரி போர் காரணமாக இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கை கொண்ட அமெரிக்க சந்தை பறி போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது எமது ஏற்றுமதியில் 25 வீதமாகும்.

அதேபோல் விரைவில், ஜீ. எஸ். பி. பிளஸ் நிபந்தனைகளை எடுத்து கொண்டு ஐரோப்பிய யூனியன் குழு இலங்கை வருகிறது. ஐரோப்பிய சந்தையும் இப்படியே சிக்கலுக்கு உள்ளானால், நம் நாட்டு ஆடை ஏற்றுமதி தொழில் துறை முழுமையாக ஸ்தம்பிதம் அடையும். வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து, பண புழக்கம் குறையும்.

புதிய உலக ஒழுங்கின் படி, இன்று பல்தரப்பு உலக மயமாக்கல் ஒப்பந்தங்கள், மெல்ல, மெல்ல, வழக்கழிந்து போவதையும், இரண்டு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் மேல் எழுந்து வருவதையும் இடதுசாரி அரசியல் கட்சி தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த கால இலங்கை அரசுகள், இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளுடன், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய முயன்ற போது, அவற்றை, எதிர்த்து பல்கலைக்கழக மாணவர் அணி, தொழிற்சங்க படை ஆகியவற்றை தெருவில் இறக்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தடுத்த தமது பாவத்தை கழுவ வேண்டிய நிலைமைக்கு இன்று ஜேவிபி தள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, இது பழைய அரசியல் செய்யும் நேரமில்லை. நிலைமையின் பாரதூரத்தை அநுரகுமார உணர வேண்டும். இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற உலகின் முன்னேறிவரும் பொருளாதார சக்திகளுடன் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

# காலியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி பெண் காயம்!

கொழும்பு, ஏப். 05

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காலி - ஹிக்கடுவையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பியுள்ளார். இதில், காயமடைந்த ஆணும் பெண்ணுமாக இருவர் காலி கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி 51 வயதான ஆண் உயிரிழந்தார். பெண் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாதங்களில் மாத்திரம் விபத்துகளில் 592 பேர் பலி!

கொழும்பு, ஏப். 05

**நடப்பு வருடத்தில் கடந்த 3 மாதங்களில் மட்டும் 565 வாகன விபத்துகள் ஏற்பட்டுள்ளன. இதில், சிக்கி 592 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

எதிர்வரும் சித்திரை புத்தாண்டில் வாகன விபத்துகளை குறைப்பதற்காக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பிரதானி பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகொட நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாளாந்தம் ஏற்படும் விபத்துகளில் 7 முதல் 8 பேர் உயிரிழக்கின்றனர்.2024 டிசெம்பர் வரையான நிலவரப்படி, மோட்டார் வாகன ஆணையாளர் பணிமனையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 54 ஆயிரத்து 513 ஆகும்.

பதிவுசெய்யப்பட்ட வாகனங்களில் அதிக எண்ணிக்கையிலானவை மோட்டார் சைக்கிள்களாகும். சுமார் 49 இலட்சத்து 22 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் உள்ளன.

இரண்டாவது அதிகமாகப் பதிவுசெய்யப்பட்ட வாகனம் முச்சக்கர வண்டிகள் - இவை 11 இலட்சத்து 85 ஆயிரம் உள்ளன.

நாட்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்களில் 72 வீதமானவை மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள். இந்த வாகனங்களே அதிக விபத்துக்களை சந்தித்து வருகின்றன.

மொத்தமாக, 2023ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 231 அபாயகரமான வீதி விபத்துகள் நடந்துள்ளன, அவற்றில் 2 ஆயிரத்து 341 உயிரிழப்புகள் நிகழ்ந்தன. 2024 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 2 ஆயிரத்து 403 விபத்துகளில், 2 ஆயிரத்து 521 பேர் மரணித்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# தென்னக்கோனுக்கு மீண்டும் மறியல்!



கொழும்பு, ஏப். 05

தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2023 டிசெம்பர் 13 ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த மார்ச் 19ஆம் திகதி மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இரண்டுநாள் பயணமாக நேற்று மாலை இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்தார். அவரை வரவேற்கும்விதமாக கொழும்பு நகரில் இலங்கை, இந்திய தேசிய கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் மோடியை வரவேற்கும் பதாதைகளும் கட்டப்பட்டிருந்தன.

# பட்டலந்த விவகாரமும் தேர்தலின் பின்னர் இயற்கையாக மரணிக்கும்

## ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே பட்டலந்த ஆணைக்குழு விவகாரம் அரசாங்கத்தால் பெரிதுபடுத்தப்படுகிறது.

தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வழமை போன்று இந்த காரணி இயற் கையாக மரணமடைந்து விடு மென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கட்டுக்கணக்கான பொய்களை கூறியே இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. இவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் கூறிய பெரும் பொய்களில் ஒன்றுதான் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற குழுவொன்றின் அறிக்கையூடாக இது குறித்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாவிட்டால் ஏனைய கட்சிகள் மீது சேறு பூசும் அரசியல் முன்னெடுக்கப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அடிப்படையாகக்கொண்டு மாத்திரமே பட்டலந்த ஆணைக்குழு விவகாரம் அரசாங்கத்தால் பெரிதுபடுத்தப்படுகிறது. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வழமை போன்று இந்த காரணி இயற்கை மரணமடைந்துவிடும். இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம் - என்றார். (ஐ)

# சீன எழுச்சியை எதிர்கொள்ளவே இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

## அரசை சாடுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஏப். 05

எழுந்து வரும் சீன இராணுவ எழுச்சியை எதிர்கொள்வதற்கு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதன் விளைவை என்றோ ஒருநாள் நிச்சயம் எதிர்கொள்ள நேரிடும் - இவ்வாறு கூறியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ.

அவரின் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய பிரதமரின் வருகையின்போது கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கப்பாடுகள் குறித்து இலங்கை ஊடகங்கள் முக்கிய பல விடயங்களை வெளிப்படுத்தவில்லை. அரசாங்கமும் உண்மையை வெளிப்படுத்தவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களின் உள்ளடக்கம் அதனால் இலங்கைக்கு கிடைக்கும் சாதக, பாதக விளைவுகள் குறித்து போதுமான விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. தீர்மானமிக்க வகையில் ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. இலங்கை ஊடகங்கள் வெளிப்படுத்தாத பல விடயங்களை இந்திய ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்திய ஊடகங்களில் ஒருசில ஊடகங்கள் இந்திய பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தில் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு இணையாக - பாதுகாப்பு தொடர்பில் மிகவும் முக்கியமானதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. எழுந்து வரும் சீன இராணுவ எழுச்சியை எதிர்கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் சாதகமாக அமையும் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கோ, நாட்டு மக்களுக்கோ அறிவிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்குக்கூட ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

இலங்கையை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக மறைமுகமாக மாற்றியமைக்கும் செயல்பாடுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்போது உடந்தையாக செயல்படுகிறார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போன்று இவரும் இலங்கையை காட்டிக்கொடுத்துள்ளார் - என்றார். (ஐ)

# மருந்துகளை சீராக வழங்க நடவடிக்கை

## சுகாதார துறை அமைச்சர்

கொழும்பு, ஏப். 05

நாட்டில் மருந்து பற்றாக்குறை, காலதாமதமின்றி மருந்துகளை தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு அவசியமான கொள்முதல் செயல்முறை, அதனுடன் தொடர்புடைய பிற நடவடிக்கைகளையும் நெறிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் மருந்து வழங்கும் செயல்பாட்டில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்காது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருந்துகள் மற்றும் உபகரண கொள்வனவில் ஏற்படும் காலதாமதங்களை குறைத்துக் கொள்ள கொள்முதல் செயல்முறையை நெறிப்படுத்தல் தொடர்பில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், சுகாதார துறையில் எழுந்துள்ள சவால்களை சமாளிக்க, அனைத்துத் துறைகளின் ஆதரவையும் பெற்று, ஒரு குழுவாக செயல்படுவதே எமது குறிக்கோள்.

கடந்த காலங்க ளில் சுகாதாரத் துறையில் சிக் கல்கள் இருக்கின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. ஒட்டுமொத்த மருந்து விநியோக செயல்பாட்டில் ஏற்பட்ட குளறுபடிகள், மருந்துகளின் தரம், விலை மற்றும் பற்றாக்குறை ஆகியவை மேற்படி குற்றசாட்டுகள் எழுவதற்கு மிக முக்கிய காரணங்களாக இருந்தன.

ஒழுங்குமுறைக்கமைய திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டிருப்பினும், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான காலத்தை குறைப்பதில் முழு கவனம் செலுத்தப்பட வேண் டும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ தேவையற்றதெனில் அதனை நீக்கிக்காட்டுங்கள்

## அரசுக்கு ஐக்கிய தேசிய கட்சி சவால்

கொழும்பு, ஏப். 05

**மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டால் அதற்கான தண்டனை மரணம் என்று ஆரம்ப காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) அச்சுறுத்தியது. மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் அந்தக் காலப்பகுதியில் கொல்லப்பட்டனர். 13ஆவது திருத்தம் தேவையற்றதெனில், நாளையே பாராளுமன்றத்தை கூட்டி அதனை இரத்து செய்ய முடியுமல்லவா? அவ்வாறில்லை என்றால் அதனை நீக்குவதாக மக்களுக்கு பொய் வாக்குறுதி அளித்தமைக்காக ஜே. வி. பி. அரசாங்கம் மன்னிப்பு கோர வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன வலியுறுத்தினார்.**



உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் ஏற்படுத்சாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே இந்திய - இலங்கை நட்புறவு பலப்படுத்தப்படும். அதற்கான முழுமையான ஒத்துழைப்பை ஐக்கிய தேசிய கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்துக்கு வழங்குவோம்.

பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தோடு இந்து - லங்கா உறவுகளை வலுப்படுத்துவோம் என்பதை வலியுறுத்துகிறோம். இதன் ஊடாக இலங்கை மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைப் பெற்றபோதிலும், அவர்களால் எதுவுமே செய்ய முடியாதுள்ளது. ஆனால், ஐக்கிய தேசிய கட்சி அவ்வாறானதல்ல. ஒரேயொரு பாராளுமன்ற ஆசனத்துடன் வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கக் கூடியளவு பலம் ஐக்கிய தேசிய கட்சிக்கு காணப்பட்டது.

1987ஆம் ஆண்டு 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்போதைய இந்திய பிரதமர் ரஜீவ் காந்தி மற்றும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பேச்சுகளை முன்னெடுத்து ஒப்பந்தம் கையெழுத்திட்டு மாகாண சபை முறைமையை கொண்டு வந்தனர்.

அன்று மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டால் அதற்கான தண்டனை மரணம் என ஜே.வி.பி. அச்சுறுத்தியது. மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டனர். இவர்கள் கூறியதைப் போன்று 13ஆவது திருத்தம் தேவையற்றதெனில், நாளையே பாராளுமன்றத்தைக் கூட்டி அதனை இரத்து செய்ய முடியுமல்லவா? அவ்வாறில்லை என்றால் அதனை நீக்குவதாக மக்களுக்கு பொய் வாக்குறுதி அளித்தமைக்காக ஜே.வி.பி. அரசாங்கம் மன்னிப்பு கோர வேண்டும் - என்றார். (ஐ)

# மாணவி கூட்டு வன்புணர்வு காதலன் உட்பட 7 பேர் கைது!

கொழும்பு, ஏப். 05

15 வயதேயான சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில், அவரின் காதலன் மற்றும் மாணவர்கள் ஐவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹாவின் ஹோமகம பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைதான மாணவர்களில் குறித்த சிறுமியின் காதலன் என்று கூறப்படுபவரும் அடங்குவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

குறித்த மாணவி மேலதிக வகுப்புக்கு செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு தனது காதலனுடன் வெளியே சென்றுள்ளார். சிறுமியை ஏமாற்றி வீடு ஒன்றுக்கு அவர் அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு பிறருடன் இணைந்து சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

வீடு திரும்பிய மாணவி தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து பெற்றோரிடம் கூறியுள்ளார். பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி ஹோமகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மீண்டும் சஜித்!

கொழும்பு, ஏப். 05

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் வருடாந்த மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தெரிவு நடந்தது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக சஜித் பிரேமதாஸவின் விசேட வேண்டுகோளின் பிரகாரம் இம்தியாஸ் பக்கீர் மரிக்கார் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவும், தேசிய அமைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்கவும், பொருளாளராக கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும், செயல்பாட்டு பிரதானியாக நளின் பண்டாரவும் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டுக்கான புதிய தேசிய செயல்குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். (அ)

# டெய்சி, யோசிதவுக்கு பிணை!

கொழும்பு, ஏப். 05

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரின் பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக நிதி மோசடி வழக்கு மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அவர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

யோஷித ராஜபக்ஷ, அவரின் பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகிய இருவரும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட இந்தக் குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் ஆதித்ய பட்டபெதிகே முன்னிலையில் நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# எதிரணியில் இருந்து எதிர்ப்பு தெரிவித்த விடயங்களை அரசு இப்போது செய்கிறது!

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 05

கடந்த அரசாங்கங்களின் ஆட்சியில் எதிரணியில் இருந்து எதிர்ப்புத் தெரிவித்த விடயங்கள் அனைத்தையும் அரசாங்கம் செய்ய நேரிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த பிரசார கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர உழைத்தவர்கள் அனைவரும் விரக்தி அடைந்துள்ளமையை காண முடிகின்றது. இந்நிலையில் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் பொறுப்பு ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாத சட்டத்தின் ஊடாகக் கைதுகள் இடம்பெறுகின்றன. அதேபோன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக தற்போதைய அரசாங்கம் கூறியது ஆனால் அவர்கள் அந்த விடயத்தை மேற்கொள்வதாக தெரியவில்லை. கடந்த அரசாங்கங்களின் ஆட்சியில் எதிரணி யில் இருந்து எதிர்ப்பு தெரிவித்த விடயங்கள் அனைத்தையும் இந்த அரசாங்கத்திற்கு மேற் கொள்ள நேரிட்டுள்ளது - என்றார். (அ)

# சிறையில் இளைஞர் மரணம்; விசாரணை கோரி கடிதம்!

கொழும்பு, ஏப். 05

சந்தேகத்தின்பேரில் வெலிக்கடை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் தொடர்பில் உடனடி விசாரணைகளை கோரி சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான குழு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி முதுவடி சட்சர நிமேஸ் என்ற இளைஞர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் பொலிஸ் காவலில் சித்திரவதை செய்யப்பட்டார், பின்னர் அங்கேயே உயிரிழந்தார். ஏப்ரல் 2ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்ற அந்த இளைஞனின் தாய் மகனின் உடைகள் குப்பையில் வீசப்பட்டுள்ளமையை அவதானித்துள்ளார். அவர் தற்கொலை செய்துகொள்ள முயன்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாவது மற்றும் பொலிஸ் காவலில் உயிரிழப்பதை தடுத்து நிறுத்துமாறு நாங்கள் முன்னரும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். ராஜ்குமாரி என்ற பெண் இதேபோன்று வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்தார்.

பொலிஸார் சட்டத்துக்கு முரணாண இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுவதை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் தனி மனித உரிமைகள் பாதிக்கப்பட்டு சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடையும்.

ஆகவே, இந்த மரணம குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# உயர் அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் வழக்குகள் தாக்கல்!

## இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு



கொழும்பு, ஏப். 05

வழக்குத் தாக்கல் செய்வதில் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு தெரிவுகள் ஏதும் கிடையாது. ஆணைக்குழுவின் செயல்பாடுகளில் அரசாங்கம் தலையிடுவதில்லை. தற்போதைய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு எதிராகவும் வெகுவிரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் அபேவிக்ரம திஸநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் விமர்சனங்களை முன்வைப்பதற்கு முன்னர் ஆளும் மற்றும் எதிர் தரப்பினர் 2023 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட் டத்தை வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன். ஆணைக்குழுவின் சுயாதீனத்தை மலினப்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தின் பேரில் படை உதவியுடன் குச்சவெளி ஆக்கிரமிக்கப்படுகின்றது!

## குச்சவெளி ஆவணப்பட இயக்குநர்

கொழும்பு, ஏப். 05

**குச்சவெளியில் திடீரென 2500 ஆண்டுகளுக்கான எச்சங்களைத் தேடிக் கொண்டு அந்த இடத்தை பௌத்தத்தின் பேரில் தொல்பொருள் திணைக்களத்தை பயன்படுத்தி இராணுவத்தின் உதவியுடன் ஆக்கிரமித்து, அங்கிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கை இடம் பெறுகிறது என்று "குச்சவெளி" நில ஆக்கிரமிப்பு குறித்து ஆவணப்படத்தின் இயக்குநர் செல்வராஜா ராஜசேகர் தெரிவித்துள்ளார்.**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தயாரித்துள்ள குச்சவெளி ஆவணப்படத்தின் காட்சிப்படுத்தல் கொழும்பில் நடைபெற்றபோதே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

அத்துடன், குச்சவெளி ஆவணப் படத்தை தயாரித்தபோது ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் குறித்தும் அவர் வெளிப்படுத்தினார்.


மேலும், குச்சவெளியில் உள்ள 32 விகாரைகளில் 24 விகாரைகளுக்கு நான் தனியாளாக பயணம் செய்துள்ளேன். அங்கு இடம்பெறும் நில அபகரிப்புக்கு ஒரு சாட்சியாக இருக்கவேண்டும் என விரும்பினேன். என்னுடைய பெயரை மதத்தை மொழியை மாற்றவேண்டிய நிலையேற்பட்டது. சுற்றுலா பயணிக்கு வழிகாட்டி போல அங்கு சென்றேன். தூண்டிலில் மீன்பிடித்தேன். சில காட்சிகளை அகற்ற வேண்டியிருந்தது. இந்த ஆவணப்படத்தில் நீங்கள் டிராக்டரில் அரிசி மூடையை ஏற்றிச்செல்வதை பார்க்கலாம் அது தமிழ் மக்களின் நிலத்தில் சிங்களவர்கள் விவசாயம் செய்து கொண்டு செல்லும் நெல்.

நாங்கள் அந்த பகுதிக்கு சென்றவேளை அதனை அறிந்த பிக்கு மலையிலிருந்து தனது ஆட்களுடன் கீழே வந்து எங்களை சுற்றிவளைத்தார். காலை பத்து மணிமுதல் நான்கு மணிவரை நாங்கள் காட்டு பாதை ஒன்றின் ஊடாக பத்து கிலோமீற்றர் நடந்து தப்பி வந்தோம். இந்த ஆவணப்படத்துக்காக இவ்வாறான பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது.

ஒரு சமூகம் - இனக்குழுவொன்று அந்த இடத்தில் வழிபாட்டு நடைமுறைகளை கடந்த 500 வருடங்களாக மேற்கொண்டுவருகிறது. இப்போது திடீரென 2500 ஆண்டுகளுக்கான எச்சங்களைத் தேடிக் கொண்டு அந்த இடத்தை பௌத்தத்தின் பேரில் தொல்பொருள் திணைக்களத்தை பயன்படுத்தி இராணுவத்தின் உதவியுடன் ஆக்கிரமிப்பதன் மூலமாக அங்கிருந்து மக்களை அப்புறப்படுத்துவார்கள்.

இதுவரை காலமாக அங்கு வாழ்ந்துவந்த மக்களின் அடையாளத்தை பாரம்பரியத்தை கலாசாரத்தை பொருளாதாரத்தை அந்த மண்ணுடனான அவர்களது வாழ்வியலை ஓரிரவில் அறுத்துதெறிந்து சிங்கள - பௌத்த தேசியவாதத்தை நிலைநிறுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது - என்றார்.

(ஐ)



# சம்மாந்துறை பிரதேச சபையால் கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

கல்முனை, ஏப். 05

சம்மாந்துறையில் போக்குவரத்துக்கு இடையூறாக சுற்றித் திரிந்த 16 கட்டாக்காலி மாடுகளை சம்மாந்துறை பிரதேச சபையினரும் பொலிஸாரும் பிடித்து தடுத்து வைத்துள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மாடுகளே இவ்வாறு பிடித்துத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் அறிவுறுத்தலை மீறி மாடுகளை கட்டி வளர்க்காதவர்களின் மாடுகளே இவ்வாறு பிடித்துத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்தி மாடுகளை 3 நாட்களுக்குள் மீட்குமாறு பிரதேச சபை அறிவித்துள்ளது.

(ஐ)

# கவிதை நூல் வெளியீட்டு விழா!

காரைதீவு, ஏப். 05

கல்முனை நற்பிட்டிமுனையை சேர்ந்த எழுத்தாளர் சதானந்தம் ரகுவரன் எழுதிய "பிரசவம்" என்ற கவிதை தொகுப்பு நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை கல்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் தி.ஜே. அதிசயராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண உதவிக்காணி ஆணையாளர் கே எல்எம். முஸம்மில், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

(ஐ)

# மாற்றுத்திறனாளிகளுக்கான ஏறாவூரில் கூட்டம் நடைபெற்றது



ஏறாவூர், ஏப். 05

ஏர்முனை மாற்று திறனாளிகள் சங்கம் ஒழுங்கு செய்த ஏறாவூர் மாற்றுத் திறனாளிகளுக்கான கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாற்றுதிறனாளிகள் சங்கத்துக்கு ஒரு வருடத்துக்கான நிதியுதவியை வர்த்தகர் மோகன் வழங்கி வைத்தார்.

(ஐ)

# தென்கிழக்கு பல்கலை துணைவேந்தர் பதவிக்கு மூவர் தெரிவு செய்யப்பட்டனர்!

அக்கரைப்பற்று, ஏப். 05

தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விசேட பேரவை ஒன்றுகூடல் நேற்று முன்தினம் பேராசிரியர் எம். எம். பாஸில் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03ஃ2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப்பட்டதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரர்களுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் பேராசிரியர் எஸ்.எம். ஜீனைடீன், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, கலாநிதி யூ.எல். செயினுதீன் ஆகியோர் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக்காலம் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 9ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் புதிய துணைவேந்தருக்கு விண்ணப்பம் கோரப்பட்டது.

இதன்படி, 9 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதிலேயே மூவர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராக நியமிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு இம்முறையும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# திருநீலகண்ட விநாயகர் ஆலய பெருந்திருவிழா ஆரம்பமானது

காரைதீவு, ஏப். 05

400 வருடங்கள் பழமை வாய்ந்த மட்டக்களப்பு ஆரையம்பதி சிறீ திருநீலகண்ட விநாயகர் ஆலய பங்குனி உத்திர பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திருவிழா பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சாதகாசிரியராக சிவசிறீ நித்திய ரூபன் குருக்கள் ஈடுபடுகிறார்.

தொடர்ச்சியாக 10 தினங்கள் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவடையும்.

400 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. அத்துடன், இந்த வருடமே முதலாவது கொடியேற்றத்துடனான பெருந்திருவிழா நடைபெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கலாசார பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்!

காரைதீவு, ஏப். 05

புத்தசாசன மற்றும் மத கலாசார அலுவல்கள் அமைச்சின் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற பல்வேறு பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிலையத்துக்கு பொறுப்பான எஸ்.ரவீந்திரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். நிருபா, நிருவாக உத்தியோகத்தர் டி. மங்களா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

(ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு கனடா பதிலடி!

## இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப்பாகங்களுக்கு 25 வீதம் வரி

ஒட்டாவா, ஏப். 05

**“அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப்பாகங்களுக்கு 25 வீதம் வரி விதிக்கப்படும்” என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**


பல்வேறு நாடுகளில் பொருள்களுக்கு பரஸ்பர வரி விதிப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வியாழக்கிழமை அமுலுக்குக் கொண்டு வந்தார்.

கனடா மற்றும் மெக்சிக்கோ நாடுகளுக்கு புதிய வர்த்தக வரியை அமெரிக்கா விதிக்கவில்லை என்றாலும் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எக்கு, அலுமினியம் மற்றும் வாகனங்களுக்கு 25 வீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகன உதிரிப்பாகங்களுக்கு 25 வீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது- ‘எமது வாகனங்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் விதித்துள்ள வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, எமது வர்த்தக ஒப்பந்தத்துக்கு இணங்காத அனைத்து அமெரிக்க வாகன உதிரி பாகங்களுக்கும் 25 வீதம் வரி விதிக்கப்படும்.

அதன்மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் கனடா வாகன உற்பத்தி தொழிலாளர்கள் மற்றும் தொழில்துறைக்காக பயன்படுத்தப்படும்.



ட்ரம்ப் விதித்த வரியைப் போன்று எங்களின் வரி வாகன உதிரி பாகங்களை பாதிக்காது. எங்களின் விநியோகச் சங்கிலியின் நன்மைகள் எங்களுக்குத் தெரியும். கனடாவில் உற்பத்தி மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் உதிரிப் பாக உற்பத்தியாளர்களுக்கு ஆதரவான கட்டமைப்பை கனடா உருவாக்கும்- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)



# மியன்மாரில் உயிரிழப்பு 3 ஆயிரத்தைக் கடந்தது!

யாங்கூன், ஏப். 05

மியன்மாரில் கடந்த மாதம் 29ஆம் திகதி ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

குறித்த நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், இந் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3,145 ஆக அதிகரித்துள்ளதுடன் 4,589 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், 221 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும், இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இந்நிலையில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து, உணவு மற்றும் தங்குமிடங்களை, அரசுடன் இணைந்து பல தனியார் நிறுவனங்கள் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றபோதும் வீதிகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதால் மீட்புப் பணிகளை மேற்கொள்வது சவாலாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ட்ரம்பின் வரி விதிப்பால்

# அமெ.சந்தைகளில் பெரும் சரிவு நிலை

நியூயோர்க், ஏப். 05

உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகள் மீது வரிகளை விதிக்கும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கையைத் தொடர்ந்து அமெரிக்க பங்குச் சந்தை கடுமையாக சரிந்துள்ளது.

கோவிட் தொற்று பரவிய காலப்பகுதிக்கு பின்னர் அமெரிக்க பங்குச் சந்தை இவ்வளவு பெரிய பின்னடைவைச் சந்திப்பது இதுவே முதல் முறை. 2020ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்க பங்குச் சந்தை மிகப் பெரிய சரிவைச் சந்தித்து வருகிறது.

ட்ரம்ப் அறிவித்துள்ள வரிகள் வர்த்தகப் போருக்கும், உலகளாவிய பொருளாதார மந்தநிலைக்கும் வழிவகுக்கும் என்ற அச்சத்தால் பங்குச் சந்தைகள் பெரும் சரிவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அப்பிள் நிறுவனத்தின் பங்குகள் பெரும் இழப்பை சந்தித்தன. ஆப்பிள் நிறுவனத்தின் பங்குகள் 9.2 சதவீதம் சரிந்தது. இது ஐந்து ஆண்டுகளில் ஆப்பிளின் மிகப் பெரிய தினசரி சரிவாகும்.

மற்றொரு பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனமான என்விடியா 7.8 சதவீதம் சரிந்தது. அமேசான் பங்குகள் ஒன்பது சதவீதத்தை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது வரிகளை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார், இது உலக நாடுகள் மத்தியில் புதிய வர்த்தகப் போரை தொடங்குகிறது என பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்கா பொருட்களுக்கு 10 வீத அடிப்படை வரியை விதிக்கிறது. மற்ற நாடுகள் மீது அமெரிக்கா விதிக்கும் அதிகபட்ச வரி 49 வீதம் ஆகும்.

சீனா மீது 34 வீதமும், ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது 20 வீதமும், ஜப்பானின் மீது 24 வீதமும், தென் கொரியாவின் மீது 25 வீதமும் வரி விதிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. (அ)

# காஸா மீது தொடர் தாக்குதல்: 50 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

காஸா, ஏப். 05

காஸா மீது நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் இராணுவம் நடத்திய பாரிய தாக்குதலில் கர்ப்பிணிப் பெண், மற்றும் குழந்தைகள் உட்பட 50 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஸா முனையில் அதிகமான இடங்களை கைப்பற்றி அதனை பாதுகாப்பு பகுதியாக அறிவிப்பதற்கு இஸ்ரேல் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே காஸா முனையில் தாக்குதலை விரிவுப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு காஸா முனையின் கான் யூனிஸ் நகர் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை நடத்தப்பட்டுள்ளது. இதில் 50 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.



இதில் 9 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் ஐந்து குழந்தைகள், நான்கு பெண்கள் அடங்குவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஹமாஸுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் காஸா முனை முழுவதும் புதிய பாதுகாப்பு பகுதியை இஸ்ரேல் உருவாக்கப்போவதாகவும் எனவே ரஃபா பகுதியில் இருந்து மக்கள் வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய கொடூர தாக்குதலுக்குப் பின்னர், இஸ்ரேல் காஸா மீது நடத்திய தாக்குதலில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்கொரிய ஜனாதிபதியூன் சுக் இயோல் அரசியலமைப்பு நீதிமன்றால் பதவி நீக்கம்!

சியோல், ஏப். 05

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோலை அரசியலமைப்பு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை பதவி நீக்கம் செய்தது.

கடந்த ஆண்டு நாட்டின் மிக மோசமான அரசியல் நெருக்கடியைத் தூண்டிய குறுகிய கால இராணுவச் சட்டத்தை அமல்படுத்தியதற்காக பாராளுமன்றத்தின் பதவி நீக்கத் தீர்மானத்தை அந்த நீதிமன்றம் உறுதி செய்தது.

யூன் சுக் பதவி நீக்கம் செய்யப்பட்டவுடன், நாட்டின் அரசியலமைப்பின்படி 60 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்கும் வரை பிரதமர் ஹான் டக்-சூ தற்காலிக ஜனாதிபதியாக தொடர்ந்து பணியாற்றுவார்.

அரசியலமைப்பின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஜனாதிபதியாக தனது கடமையை மீறியதாகவும், அவரது செயல்களின் விளைவு ஜனநாயகத்திற்கு கடுமையான சவாலாகவும் இருந்ததாக தற்காலிக தலைமை நீதிபதி மூன் ஹியுங்-பே கூறினார்.

எட்டு நீதிபதிகள் மத்தியில் இந்த தீர்ப்பு ஒருமனதாக வழங்கப்பட்டது என்று மூன் கூறினார்.

இதனிடையே யூனை பதவி நீக்கம் செய்யக் கோரி நடைபெற்ற பேரணியில் இரவு முழுவதும் முகாமிட்டிருந்த நூற்றுக் கணக்கானவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் மேற்கண்ட தீர்ப்வு வெளியானதும் “நாங்கள் வென்றோம்!” என்று கோஷமிட்டனர்.

தென்கொரியாவின் வளர்ச்சி குறைந்து வரும் நேரத்தில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய நிர்வாகத்தை சமாளிக்கும் முயற்சிகளை மறைத்த பல மாத அரசியல் கொந்தளிப்புக்கு மத்தியில் இந்த தீர்ப்பு வந்துள்ளது.

64 வயதான யூன், கிளர்ச்சி குற்றச்சாட்டில் குற்றவியல் விசாரணையை எதிர்கொள்கிறார்.

ஜனவரி 15 ஆம் திகதி கைது செய்யப்பட முதல் தென் கொரிய ஜனாதிபதியாக அவர் ஆனார். ஆனால் நீதிமன்றம் அவரது பிடியாணையை இரத்து செய்த பின்னர் மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டார்.

அரச விரோத கூறுகளை வேரறுக்கத் தேவை என்று அவர் கூறி கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி இராணுவச் சட்டத்தை யூன் அறிவித்ததாலும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி தனது பாராளுமன்ற பெரும்பான்மையை துஷ்பிரயோகம் செய்ததாகவும், அது நாட்டை அழிப்பதாகக் கூறியதாலும் இந்த நெருக்கடி ஏற்பட்டது.

பாராளுமன்றத்தை மூட பாதுகாப்புப் படையினரின் முயற்சிகளை சட்டமியற்றுபவர்கள் மீறி அதை நிராகரிக்க வாக்களித்ததை அடுத்து, ஆறு மணி நேரத்திற்குப் பிறகு யூன் ஆணையை நீக்கினார்.

அவசரகால இராணுவ ஆட்சியை முழுமையாக அமுல்படுத்த தான் ஒருபோதும் விரும்பவில்லை என்றும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கூறி, அதன் விளைவைக் குறைத்து மதிப்பிட முயன்றதாகவும் யூன் கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஹைதராபாத் அணியை வீழ்த்தியது கொல்கத்தா




கொல்கத்தா, ஏப். 05

80 ஓட்டங்களால் ஹைதராபாத் அணியை வெற்றி கொண்டு சாதித்தது கொல்கத்தா அணி.

ஐ. பி. எல். தொடரின் 15ஆவது லீக் போட்டி கொல் கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கொல்கத்தா, ஹைதராபாத் அணி கள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதரா பாத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதன்படி, முதலில் ஆடிய கொல்கத்தா அணி நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்களை இழந்து 200 ஓட்டங்கள் குவித்தது.

வெங்கடேஷ் ஐயர் 29 பந்துகளில் 60 ஓட்டங்களும், ரகுவன்ஷி 32 பந்துகளில் 50 ஓட்டங்களும் குவித்தனர். ரகானே 38 ஓட்டங்களும் ரிங்கு சிங் 32 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து, 201 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஹைதராபாத் அணி களமிறங்கியது. முன்னணி வீரர்கள் விரைவில் வெளியேறினர்.

கிளாசன் 33 ஓட்டங்களும் கமிந்து மெண்டிஸ் 27 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், ஹைதராபாத் 16.4 ஓவரில் 120 ஓட்டங்க ளுக்கு சுருண்டது. இதன்மூலம் 80 ஓட்டங்கள் வித்தியா சத்தில் கொல்கத்தா அபார வெற்றி பெற்றது.

நடப்பு தொடரில் கொல்கத்தா பெற்றுள்ள 2ஆவது வெற்றி இதுவாகும். இது ஹைதராபாத் அணியின் 3ஆவது தோல்வியாகும்.

கொல்கத்தா சார்பில் வருண் சக்கரவர்த்தி, வைபவ் அரோரா தலா 3 விக்கெட்களையும், ஆண்ட்ரு ரசல் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். (ஐ)




## குஜராத் அணியின் ரபாடா தனது தாயகம் திரும்பினார்

அகமதாபாத், ஏப். 05

நடப்பு ஐ. பி. எல். தொடரில் குஜராத் ரைட்டன்ஸ் அணிக்காக விளையாடி வரும் ரபாடா, சொந்தக் காரணங்களுக்காக தனது தாயகமான தென்னாபிரிக் காவுக்கு திரும்பியுள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை குஜராத் ரைட்டன்ஸ் அணி அறிவித்துள்ளது.

நடப்பு தொடரில் ரபாடா முதல் இரண்டு போட்டி களில் விளையாடியிருந்தார். கடந்த புதன்கிழமை நடந்த பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடவில்லை.

நடப்பு தொடரில், 10.75 கோடி இந்திய ரூபாய்க்கு ரபாடாவை குஜராத் அணி வாங்கியது.

82 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடியுள்ள ரபாடா 119 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். நடப்பு தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டி யின் பின்னர், "இதை கிரிக்கெட் என்று சொல்லாதீர்கள் துடுப்பாட்டம் (பற்றிங்) என்று சொல்லுங்கள்" என விரக் தியில் அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 183 விக்கெட்களை வீழ்த்தி சாதித்த புவனேஸ்வர் குமார்!




பெங்களூரு, ஏப். 05

ஐ. பி. எல். தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர்கள் வரிசையில் பிராவோ, அஸ்வினின் சாதனையை சமன் செய்துள்ளார் பெங்களூரின் புவனேஸ்வர் குமார்.

பெங்களூரு - குஜராத் அணிகளுக்கு இடையிலான போட்டி புதன்கிழமை நடந்தது. இதில், பெங்களூரு வீரர் புவனேஸ்வர் குமார் ஒரு விக்கெட்டை வீழ்த்தி னார். இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் அதிக விக் கெட்கள் வீழ்த்திய பிராவோ, அஸ்வின் ஆகியோரின் சாதனையை சமன் செய்தார்.

பிராவோ 161 போட்டிகளில் 183 விக்கெட்களும் புவனேஸ்வர்குமார் 178 போட்டிகளில் 183 விக்கெட்க ளும் வீழ்த்தியுள்ளனர். இந்த பட்டியலில் சாஹல் (206) முதல் இடத்தில் உள்ளார்.

அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர்கள்: யஸ்வேந்திர சாஹல்- 206 விக்கெட்கள் பியூஸ் சாவ்லா - 192 விக் கெட்கள்அஸ்வின் - 183 விக்கெட்கள் புவனேஸ்வர் குமார் - 183 விக்கெட்கள் பிராவோ - 183 விக்கெட்கள் (ஐ)

## சிராஜ் கொடுத்த அடி இந்திய அணியினருக்கே

### சேவாக் தெரிவிப்பு

பெங்களூரு, ஏப். 05

சிராஜ் உண்மையில் பெங்களூரு அணிக்கு பதிலடி கொடுக்கவில்லை இந்திய அணிக்கு கொடுத்துள்ளார் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் வீரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.




பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி குஜராத் அணியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது. புதன் கிழமை நடந்த இந்தப் போட்டியில் குஜராத் அணியின் வீரரான முகமது சிராஜ் 3 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம் கிடைக்காததால் ஏதோ ஒரு வகையில் அவர் மனதளவில் காயத்தை சந்தித்துள்ளார். அதனால் அவருக்குள் நெருப்பு உருவாகியுள்ளது. அந்த நெருப்பை நான் பார்த்தேன். ஓர் இளம் வேகப்பந்து வீச்சாளரிடமி ருந்து நாங்கள் எதிர்பார்ப்பது இதுதான்.

என்னை தேர்வு செய்யாத உங்களுக்கு தற்போது எனது திறமையைக் காண்பிக்கிறேன் என்ற வகையில் அவர் செயல்படுகிறார். இதே வேகத்தில் அவர் சிறப் பாக விளையாடி இந்திய அணிக்கு மீண்டும் வருவேன் என்று நம்புகிறேன் - என்றார். (ஐ)

## இது எங்களுக்கு சிறந்த நேரமல்ல

### கம்மின்ஸ் சொல்கிறார்




கொல்கத்தா, ஏப். 05

இது எங்களுக்கு சிறந்த நேரம் இல்லை. களத்தடுப் பில் மோசமாக செயல்பட்டதாலேயே தோற்றோம்", - இவ்வாறு கூறியுள்ளார் ஹைதராபாத் அணியின் தலைவர் கம்மின்ஸ்.

கொல்கத்தா அணியுடனான தோல்வியின் பின்னர் அவர் கூறுகையில், "இது எங்களுக்கு சிறந்த நேரம் இல்லை. இந்த இலக்கு எட்டக்கூடியதுதான், விக்கெட் கள் எங்கள் வசமிருந்தன. களத்தடுப்பில் மிக மோசமாக செயல்பட்டதன் காரணமாக இறுதியில் தோல்வி கண்டோம். நாங்கள் யதார்த்தமாக இருக்க வேண்டும். தொடர்ச்சியாக மூன்று ஆட்டங்களில் அது எங்களுக்கு பலனளிக்கவில்லை.

நாம் சிறந்த விருப்பங்களை தெரிவு செய்திருக்க முடியுமா என்பதை திரும்பிப் பார்க்க வேண்டும். எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டத்தை தொடங்கும் போது சிறப்பானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், இறுதியில் முடிவு வேறு மாதிரியாக இருக் கிறது. இனி அடுத்ததாக எங்களுக்கு நன்றாக தெரிந்த ஒரிடத்துக்கு செல்கிறோம். அங்கு எங்கள் தவறுகளை சரி செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## கொல்கத்தா அணி வரலாற்று சாதனை



கொல்கத்தா, ஏப். 05

ஐ. பி. எல். அணிகளில் 3இற்கு எதிராக 20 அல்லது அதற்கு மேலான போட்டிகளில் வெற்றி பெற்ற ஒரே அணி என்ற சாதனையை கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி படைத்துள்ளது.

ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியை வெற்றி கொண்டதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் மகத்தான வெற்றி ஒன்றை கொல்கத்தா படைத்துள்ளது.

அதாவது, ஐ.பி.எல். வரலாற்றில் ஹைதராபாத் அணிக்கு எதிராக 29ஆவது போட்டியில் விளையாடிய கொல்கத்தா அணி 20ஆவது வெற்றியை பெற்றது. இதேபோல் பஞ்சாப்பு கிங்ஸ் அணிக்கு எதிராக 21 போட்டிகளிலும் பெங்களூருவுக்கு எதிராக 20 போட் டிகளிலும் கொல்கத்தா அணி ஏற்கனவே வென்றுள்ளது. இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் மூன்று அணிக ளுக்கு எதிராக 20 அல்லது அதற்கு அதிகமான போட்டி களில் வென்ற முதல் அணி என்ற சாதனையை கொல்கத்தா படைத்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரம்பின்...

இது உண்மையில் ஒரு பெரிய அதிர்ச்சியாகும். இவ்வாறானதொரு தீர்மானத்தை நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த புதிய வரி அதிகரிப்பானது ஏற்றுமதியை 3 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் எமது அரசாங் கத்தின் இலக்கைத் தடுக்கக்கூடும்.

இலங்கைக்கு 44 வீத ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகக் தொடர்புகளை குறைக்கும். இது இலங்கைக்கு விகிதாசாரமாக அபராதம் விதிக்கும் ஒரு முறையாகும். எமக்கு இவ்வாறு வரி விதிக்கப்பதற்கு அமெரிக்காவிடம் எந்த அரசியல் காரணமும் இல்லை.

வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை இப்போது தான் படிப்படியாக மீண்டு வருகிறது. இவ்வாறான நிலைமையில் இந்தளவு வரியைத் தாங்கிக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கும். எவ்வாறிருப்பினும் ஜனாதி பதி ட்ரம்ப்பின் திட்டம் நீண்ட காலத் துக்கு சாத்தியமற்றதாக இருக்கலாம்-என்றார். (அ)

## நேற்றிரவு...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பினை ஏற்று உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.33 மணியளவில் நாட்டை வந்தடைந்தார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான உயர்மட்டக் குழு பிரதமர் மோடியை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றது. இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் மோடிக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் மோடிக்கு இடையில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

பேச்சுவார்த்தைகளின் நிறைவில் இருவராலும் கூட்டு ஊடக அறிவித்தலும் வெளியிடப்படவுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த விஜயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட உயர்மட்ட இந்தியக் குழுவும் இணைந்துள்ளது.

இதன்போது வலுசக்தி, டிஜிற்றல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம் ஆரம்பிப்பு, வெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய 5,000 மெற்றிக் தொன் தம்புள்ளை களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம், 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்களங்களை நிறுவும் திட்டம் என்பன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகர் ஊடாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல், இந்தியப் பிரதமர் அநுராதபுரம் ஸ்ரீமகா போதிக்கு வழி பாடு மேற்கொள்ள இருப்பதுடன் இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ - அனுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ரயில் பாதையை திறந்து வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ள தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் பிரதமர் மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## நல்லெண்ண...

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் முதற் தடவையாக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களே இவ்வாறு விடு விக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்கள் இந்தியா தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். (அ)

## மேன்முறையீட்டு...

ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்திருந்தது. அதன் அடிப்படை யிலேயே பெரும்பாலும் 37 ரிட் மனுக்களில் பலவற்றையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆனால், நேற்று மாலை இதே விவகாரத்தையொட்டி தனது தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றம், மேற்படி பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தின் நிழல் படப் பிரதியில் சமாதான நீதிவான் சான்றுரைத்திருப்பதை உரிய ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

ஒரே விடயத்தையொட்டி இரண்டு நீதிமன்றங்கள் வித்தியாசமான தீர்ப்பை வழங்கியிருக்கையில், நியாயாதிக்கம் கூடிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப்

பின்பற்ற தேர்தல் ஆணையகம் தீர்மானித்து இருக்கின்றது. அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்து, உயர்நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அதன்படி செயற்பட தேர்தல் ஆணையகம் முடிவு செய்து இருப்பதாகத் தெரியவருகின்றது.

ஆயினும், நீதிமன்ற விடுமுறை நேற்றுடன் தொடங்குவதால், விடுமுறை சமயத்தில் விசேடமாக உயர்நீதிமன்றத்தைக் கூட்டுவதற்கான விண்ணப்பத்தைத் தேர்தல் ஆணையகம் சமர்ப்பித்து, தனது மேன்முறையீட்டை முன்வைக் கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## மோடியின்...

வரி விதிப்பின் பின்னரான நிலைமையின் பாரதூரத்தை ஜனாதிபதி அநுரகுமார உணர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது பழைய இடதுசாரி அரசியல் செய்யும் நேரமில்லை. மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி யுகத்தை நம் நாடு தாங்காது. தொழிற்துறை முடங்கி, வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து, பண புழக்கம் குறைய விடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க வரி விதிப்பு மற்றும் இந்திய பிரதமரின் வருகை ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

'கடந்த கால இலங்கை அரசுகள், இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளுடன், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய முயன்றபோது அவற்றை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர் அணி, தொழிற் சங்கப் படை ஆகியவற்றை தெருவில் இறக்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தடுத்த தமது பாவத்தை கழுவவேண்டிய நிலைமைக்கு இன்று ஜே.வி.பி தள்ளப்பட்டுள்ளது" எனவும் மனோ கணேசன் கூறினார்.

ஆகவே இது பழைய அரசியல் செய்யும் நேரமில்லை. நிலைமையின் பாரதூரத்தை அநுரகுமார உணர வேண்டும். இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற உலகின் முன்னேறிவரும் பொருளாதார சக்திகளுடன் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய ஜனாதிபதி முன்வரவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## வடக்கில்...

அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது.

மூன்று தசாப்த கால போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு தற்போது அதிகளவு முதலீட்டாளர்கள் வருகை தருகின்றனர். அவர்களுக்கான ஒழுங்குகளைச் செய்து கொடுக்கின்றோம். அரசாங்கமும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இந்தக் காலத்திலேயே முதலீடுகளுக்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. எமது இளையோருக்கு வேலைவாய்ப்பு பிரச்சினையாகவுள்ளது.



தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் என்பன எமது அபிவிருத்திக்கு தடையாகவுள்ளன என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் முதலீட்டுச் சபையின் தலைவர் தனது உரையில்-

இவ்வாறான கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியமைக்காக ஆளுநருக்கு நன்றிகளைக் கூறுகின்றோம். முதலீடுகளை ஊக்குவிக்கும் அவரது முயற்சியை வரவேற்கின்றோம். எவ்வளவு விரைவாக வடக்கின் மூன்று முதலீட்டு வலயங்களுக்குமான பணிகளை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செய்வதற்கே விரும்புகின்றோம்.

அடையாளப்படுத்தப்பட்ட மூன்று முதலீட்டு வலயங்களையும் நாங்கள் பார்வையிட்டுள்ளோம்-என்றார்.

காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய முதலீட்டு வலயத்துக்கான போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாக தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன. இதனை முன்னெடுப்பதிலுள்ள உடனடிச் சவால்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு தீர்வுகளும் கண்டறியப்பட்டன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அதற்கான ரயில் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் புனரமைத்து மீளமைப்பதுடன் அதனை காங்கேசன் துறை துறைமுகம் வரையில் விரிவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பரந்தனுக்கு அண்மையாக ரயில் நிலையம், ஏ-9 பிரதான வீதி உள்ளமை சாதகமாக அம்சம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் சில இடங்களில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

மாங்குளத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி வனவளத் திணைக்களத்துக்குரியது என்பதால் அதனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மூன்று முதலீட்டு வலயங்களைச் சுற்றியும் வேலிகளை அமைத்து அதனை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் அமைக்கப்படவுள்ள முதலீட்டு வலயங்கள் சுற்றுச் சூழல் நேயமிக்கதாக அமையும் என முதலீட்டுச் சபையினர் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற முதலீட்டாளர்கள், கடந்த காலங்களிலும் பல சந்திப்புக்கள் நடைபெற்றாலும் அடுத்த கட்டத்துக்கு அவை நகர்ந்திருக்கவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். அத்துடன் உள்ளூர் அதிகாரிகள் தமது முதலீட்டு முயற்சிக்கான போதிய ஒத்துழைப்புக்களை வழங்க மறுக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினர்.

தற்போது ஆரம்பித்துள்ள தமது முயற்சியில் இவ்வாறான கசப்பான சம்பவங்கள் நடைபெறாது என்றும், இந்த மூன்று முதலீட்டு வலயங்களும் நிச்சயம் இயங்கும் எனவும் முதலீட்டுச் சபையின் தலைவர் உறுதியளித்தார். (அ-05)

## 59மனுக்களை...

விசாரித்து வந்த உயர்நீதிமன்றம் இதே காரணத்துக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஏற்று அங்கீகரித்து இருப்பதோடு, தேர்தல் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மொத்தம் 53 ரிட் மனுக்கள் மற்றும் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் நேற்று அடியோடு நிராகரித்துத் தீர்ப்பளித்துள்ளது.

சமாதான நீதிவான் சான்றுரைத்த பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தின் பிரதியை ஏற்றுக்கொள்ள உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பில் காலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட விடயத்துக்கு முற்றிலும் மாறான முடிவை உயர்நீதிமன்றம் அறிவித்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைராஜா, மகிந்த சமயவர்த்தன, சம்பத் அபயக்கோன் ஆகியோரைக் கொண்ட

ஆயம் இந்தத் தீர்ப்பை நேற்று மாலை வழங்கியது. (அ)

## பூஸா...

பாதிக்கப்பட்டவரின் உடலில் 11 இடங்களில் கூரிய ஆயுதத்தினால் குத்தப்பட்ட காயங்கள் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 46 வயதுடைய நந்தகுமார் சிவானந்தா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறையில் அண்மையில் நடந்த சோதனை அல்லது போதைப்பொருள் தொடர்பான மோதல் இந்த மரணத்துடன் தொடர்புடையதா என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (அ)

## தேர்தல்...

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கருத்துரைத்த அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாக கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான அனைத்து பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மின்சார வாகனங்கள் இறக்குமதி அனுமதி வழங்கலில் மோசடிகள்!

## கோபா குழுவில் வெளிப்பட்டது

கொழும்பு, ஏப். 05

**வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அடிப்படையில் வெளிநாட்டு பணிபுரியும் இலங்கையர்களுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாக பாராளுமன் றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) விசாரணையில் தெரியவந்துள்ளது.**

கோபா குழுவின் விசாரணையின் போது, அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதில் பண மோசடி நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாக தணிக்கை அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 செப்ரெம்பர் 30 வரை இறக்குமதி செய்யப் பட்ட 921 வாகனங்களுக்கு சொகுசு வாகன வரி விலக்கு உயர்த்தப்பட்டதன் காரணமாக, அரசாங்கத்துக்கு 242 கோடி ரூபாய் வரி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இதன்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு முக்கிய நிறுவனங்கள் 640 அனுமதிப்பத்திர பெறுநர்களுக்கு வசதிகளை வழங்கிய இறக்குமதியாளர்களாக செயல்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

கோபா குழுவில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

குறித்த வெளிப்படுத்தலின் படி, அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் போர்வையில் வியாபாரம் ஒன்று நடந்துள்ளதாக கோபா குழுவிற்கு தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், வெளிநாட்டில் இல் லாத நால்வருக்கு மின்சார வாகன அனுமதிப்பத்திரங் கள் வழங்கப்பட்டன என்றும் தெரிய வந்துள்ளது.

முன்னாள் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் இவை அனைத்தும் செய்யப்பட்டன என்றும் கோபா குழுவில் தெரியவந்துள்ளது. (ஐ)

## வடக்கு மீனவர் பிரச்னை: மோடியுடன் பேச வேண்டும்!

### டக்ளஸ் தேவானந்தா சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 05

இலங்கைக்கு வருகை தரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் வடக்கு கடற்றொழிலாளர் விவகாரம் குறித்து பேசுவது மிகவும் முக்கியமானது என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.



அவர் மேலும் தெரிவிக்கை யில்,இலங்கையில் இருக் கின்ற மிக முக்கியமான பிரச்னைகளில் இழுவைமடிப் படகுகள் ஊடாக இலங்கை கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்து சட்டவிரோத கடற் றொழிலில் ஈடுபடுவதும் ஒன்று.

வடக்கு மாகாண தமிழ் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படும் நிலையில் இருக்கிறது. எனவே, கட்டாயமாக இது தொடர்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் இது தொடர்பாக பேச வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை.

இது தொடர்பாக நான் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளேன் - என்றார்.இதேவேளை, கச்சதீவை மீண்டும் தருமாறு மோடி தமிழ்நாடு சட்ட சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட டக்ளஸ் தேவானந்தா, "இது ஓர் அரசியல் ரீதியான தீர்மானமே. இது நடைமுறைக்கு சாத்தியப்படாத ஒரு விடயம்", என்றார். (ஐ-05)

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஹர்ஷவுக்கு பிணை மறுப்பு

கொழும்பு, ஏப். 05

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டியவை பிணையில் விடுவிக்குமாறு முன்வைத்த கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் போது இ-வீசா வழங்கும் செயல்முறையை இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை எடுத்த முடிவை செயல்படுத்துவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பழைய வீசா வழங்கும் முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியதன் மூலம் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## கப்ரால் மீதான வழக்கு ஜூனில் விசாரணை!

கொழும்பு, ஏப். 05

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி முழுமையாக விசாரணை எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.



2012 ஆம் ஆண்டு கிரேக்க பத்திரங்களில் பணத்தை முதலீடு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 180 கோடி அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு நேற்றைய தினம் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் ஆர். எஸ். எஸ். சபுவித முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இந்த வழக்கின் மற்றுமொரு சந்தேக நபரான சந்திரசிறி ஜயசிங்கவின் மரணத்தை உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் கையளிக்கப்பட்டன.

அதன் பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் திருத்தப்பட்டது. இதனையடுத்து இந்த வழக்கை எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி முழுமையாக விசார ணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## பெண்ணாக நடித்தவரிடம் 17 பிக்குகள் ஏமாந்தனர்!

கொழும்பு, ஏப். 05

பெண்ணாக நடித்து 17 பிக்குகளை ஏமாற்றி நிதி மோசடி செய்த இளைஞர் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்கள இணைய புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

17 பௌத்த பிக்குகள் குற்றப் புலனாய்வு திணைக்க ளத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து தலாவ பகுதியை சேர்ந்த இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலபே தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் தகவல் தொழில்நுட்பத் துறை மாணவரான இவர் பிக்குகள் அதிகமாக பயன்படுத்தும் முகநூல் ஒன்றில் அறிமுகமாகி பின் போலி முக நூல் ஒன்றின் ஊடாக முதலில் பிக்குகளுடன் குறுந்தகவல்களை அனுப்பியுள்ளார்.

அதன் பின் பெண் குரலில் வீடியோ அழைப்பில் பேசி ஆபாச படங்களை காட்டி, அவர்களை தூண்டி அவர்களின் செயல்பாடுகளை காணொலி எடுத்து அவற்றை சமூகமயப்படுத்துவதாக பயமுறுத்தி பணம் பெற்று வந்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட காணொலிகளை சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக மிரட்டி, சந்தேக நபர் பிக்குகளை மிரட்டி, அவர்களிடம் பணம் கேட்டார் என்றும் பணம் கொடுக்க மறுக்கும் பிக்குகளின் காணொலிகளை சந்தேக நபர் சமூக ஊடகங்களில் வெளியிட்டார் என்றும் தெரிய வந்துள்ளது.சில பிக்குகள் சந்தேக நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கினர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்தது. (ஐ)

## சித்திரை புத்தாண்டு காலப் பகுதிகளில் பாதுகாப்பான பயணத்தை முன்னெடுங்கள்

### மன்னார் வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி

மன்னார், ஏப். 05

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பண்டிகையின் போது மக்கள் பாதுகாப்பாக பயணங்களை முன்னெடுக்கவேண்டும் என்பதோடு மதுபோதையில் வாகனம் செலுத்துதல் முற்றாகத் தடை செய்யப்படவேண்டியது என மன்னார் மாவட்ட தொற்றா நோய்ப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி துரைநாயகம் ஒஸ்மன் டெனி தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பிறப்பு எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான வருடமாக பிறக்க உள்ள நிலையில் புத்தாண்டு காலப்பகுதியில் மக்களாகிய நாங்கள் சில விடயங்களை கடைப்பிடிக்கவேண்டிய கட்டாயம் உள்ளது.

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பொதுவாக மது அருந்திவிட்டு வாகனங்களைச் செலுத்துதல் அல்லது மது அருந்திவிட்டு வேறு இடங்களுக்கு பயணித்தல் மற்றும் பட்டாசு கொழுத்துதல் உள்ளிட்ட விடயங்களில் அவதானமாகச் செயல்படவேண்டும்.

மது அருந்திவிட்டு வாகனங்களைச் செலுத்துவதை முற்றாக தவிர்த்து கொள்ளவேண்டும். மேலும் பாதுகாப்பான வகையில் பட்டாசுகளை கொளுத்த வேண்டும். புத்தாண்டையொட்டி விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை மாவட்டத்தில் முன்னெடுக்கின்றபோது மருத்துவக் குழுவுடன் இணைந்து முதலுதவி குழுவையும் இணைத்துக் கொண்டு குறித்த நிகழ்வுகளை நடத்துவது ஏற்புடையதாக இருக்கும்.

எனவே புத்தாண்டு நிகழ்வுகளை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து முன்னெடுக்கின்றபோது குறித்த விடயங்கள் குறித்து அனைவரும் அவதானத்துடன் செயல்படவேண்டும்-என்றார். (அ)

## மோடிக்காக வந்த 4 இந்திய ஹெலிகள்

கொழும்பு, ஏப். 05

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று பிற்பகல் இலங்கை வந்தார். அவருக்காக இந்தியாவில் இருந்து கொழும்புக்கு 4 ஹெலிகளும் வந்துள்ளன.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இன்று காலை சுதந்திர சதுக்கத்தில் சிறப்பு வரவேற்பு வழங்கப்படவுள்ளது. இதன் பின்னர், ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையே இருதரப்பு கலந்துரையாடல் நடைபெறும்.

இந்தியப் பிரதமரின் வருகையை முன்னிட்டு, அவருடைய பயன்பாட்டுக்காக எம். ஐ 17 வகை 4 ஹெலிகொப்டர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இதில் 40 இந்திய விமானப்படையின் வந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 05.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org